தலைவர் கலைஞரின் அரசியல் வாழ்க்கையினை

எதிர்காலத் தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும்!

முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை.ஜூன் 4-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கலைஞர் திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர், மாவட்ட கழகச் செயலாளர் கே. ஆர். பெரியகருப்பன் மலர் தூவி மரியாதை செலுத்தினர் .பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பன்மொழி வித்தகராக திகழ்ந்தார். இயல், இசை ,நாடகம் , அரசியல் உட்பட அனைத்து துறைகளிலும் பரிணமித்தவர்.அவர் சாதிக்காத துறைகளே இல்லை என்று கூறலாம் .அரசியலில் இந்திய துணை கண்டத்தில் தலைமை வாய்ந்த தலைவராக திகழ்ந்தார்.

தமிழகத்தில் ஐந்து முறை முதல்வராக பணியாற்றி தமிழகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியவர். அவர் காலத்தில் தமிழகம் மிகப் பெரிய வளர்ச்சியினை பெற்றது. மொழி, இனம், நாட்டின் வளர்ச்சிக்காக தனது இறுதி நாள் வரை அர்ப்பணித்து வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களின் பல்வேறு திட்டங்கள் இன்று தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தலைவர் கலைஞரை அரசியலுக்கு அப்பாற்பட்டு எல்லோருமே ரசித்தார்கள். போற்றினார்கள். மதித்தார்கள் .மக்கள் பணி ஒன்றே தனது குறிக்கோள் என்று கடைசி வரை பணியாற்றி தனது அரசியல் வாழ்க்கையில் ஒரு சக்தி வாய்ந்த தலைவராக விளங்கினார்.

அவரது வாழ்க்கை முறையினை அவரது அரசியல்நெறியினை இன்றைய எதிர்கால தலைமுறையினர் நிச்சயம் தெரிந்து கொள்ள வேண்டும் அதற்காகத்தான் இந்த பிறந்தநாள் கொண்டாடப்பட்டு வருகிறது .தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கழகம் கொண்டாடி வருகின்றது . இதன் மூலம் அவரது வாழ்க்கை முறைகள் அவர் தமிழகத்திற்கு செய்த சாதனைகள் மக்களிடம் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது சிவகங்கை மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் ஊராட்சிகள் அளவில்நிர்வாகிகள் கழகத்தினர் சிறப்பான முறையில் பிறந்த நாளை கொண்டாடி வருகிறார்கள். அவரது ஆட்சி காலத்தில் நடைபெற்ற சாதனைகளை மக்களிடம் எடுத்து கூறி வருகிறார்கள்.

அவர் பிறந்த இந்த தமிழ் நாட்டில் நாமும் பிறந்தோம் என்று நாம் அனைவரும் மகிழ்ச்சி அடையவேண்டும். அதுவே நமக்கு பெருமை ஆகும். அவர் தமிழக மக்களுக்கு பல்வேறு திட்டங்களை தீட்டி அதை நிறை வேற்றியுள்ளார் .அவரது வழியில் கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் தளபதி அவர்களும் கழகப் பணியினை தீவிரப் படுத்திவருகிறார். அதே போல் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி அவர்களும் நமக்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளார்கள். அவர்கள் வழியில் அவர்கள் தலைமையில் கழகம் மீண்டு வரும். மீண்டும் ஆட்சி அமைக்கும் .

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார். பேட்டியின் போது பேரூர் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எ ஸ் . ஏ . வ ல் ல ப ர ய் , பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், துணைத் தலைவர் கான் முகமது, ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூரில் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று அடுத்தகட்ட பணிகள் குறித்து உரையாற்றினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமையில் கொண்டாடப்பட்டது!

கன்னியாகுமரி, ஜூன் 4 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (03.06.2026-புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரி, மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப் பட்டது.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், தலைமைக் கழக கள ஆய்வுக் குழு உறுப்பினர் சுபா. சந்திரசேகர், மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், கழக தணிக்கை குழு உறுப்பினர் என்.சுரேஷ்ராஜன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவர் வி.ஜோசப் ராஜ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்ட துணை செயலாளர் ஏ.ஆர். பூதலிங்கம், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர் இ.ஜவகர் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் மற்றும் பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவு சிறப்பு உள்நோயாளிகளுக்கு நேற்று (03.06.26) மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில தணிக்கை குழு உறுப்பினர் மற்றும் வி .வேலுச்சாமி அவர்களும் மாநில பொதுக்குழு உறுப்பினர் வைகை பரமன் மாநகர் மருத்துவ அணி தலைவர் ச.அண்ணாதுரை 53வது வட்டத் துணைச் செயலாளர் எஸ். டி .சண்முகசுந்தரம் மற்றும் கழக உறுப்பினர் கு. கருணாநிதி மருத்துவமனை நிர்வாகிகள் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.